*6th International Symposium 2016, South Eastern University of Sri Lanka, pp. 873-880.*

# பொருளாதார பங்கேற்பால் நலிவடையும் பெண்கள் (மாத்தளைக் களுதாவளை பிரதேசத்தில் வெளிநாட்டுக்கு பணிக்குச் சென்ற பெண்களை அடிப்படையாகக் கொண்ட விடய ஆய்வு)

**Kandasamy Saritha**
Department Of Geography, Eastern University of Sri Lanka
***Saritha_0702@yahoo.com***

**ஆய்வுச் சுருக்கம்:** பொருளாதாரத்தில் பங்கேற்பதால் பெண்கள் பல்வேறு வகையான நலிவு நிலைக்குள்ளாகின்றனர். இலங்கையில் பொருளாதார பங்கேற்பால் நலிவுறும் பெண்கள் குழுக்களாக பெருந்தோட்டத்தில் வேலை செய்யும் பெண்கள்இ ஆடை தொழிற்சாலையில் வேலை செய்யும் பெண்கள்இ வெளிநாட்டுக்கு வேலைக்கு செல்லும் பெண்கள் ஆகியோர் அடையாளப்படுத்தப்படுகின்றனர். வறுமையுடன் குறைந்த கல்விஇ குறைவான திறனுடனான ஒரு பெண்ணின் தெளிவான தெரிவாக வீட்டு வேலைகள் காணப்படுகின்றன. இதனை இலங்கை வெளிநாட்டு வேலைவாய்ப்பு பணியகத்தின் புள்ளிவிபரவியல் சான்று பகர்கின்றது. 2015 ஆம் ஆண்டு மத்திய கிழக்கிற்கு பணிக்கு சென்ற பெண்களின் அளவு 13.5மூ ஆக காணப்படுகின்றது. இதனை அடிப்படையாக கொண்டு மாத்தளைஇ களுதாவளை பிரதேசத்தில் வெளிநாட்டிற்கு பணிக்கு சென்றவர்களில் 10 பெண்களை தெரிவு செய்து அவர்களின் கல்விஇ வெளிநாட்டிற்கு செல்ல முன் செய்த தொழில்இ திருமணம்இ கணவனின் தொழில்இ வெளிநாட்டிற்கு செல்வதற்கான தள்ளுவிசை இழுவிசை காரணிகள்இ அதனால் ஏற்பட்ட நலிவு நிலைகள்இ தீர்வாலோசனைகள் என்பதனை நோக்கமாக கொண்டு இவ்வாய்வு மேற்கொள்ளப்பட்டது. இவ்வாய்வு ஒரு விடயஆய்வு ஆகும். இலங்கை வங்கி ஆண்டறிக்கை தரவுகள்இ வெளிநாட்டு வேலை வாய்ப்பு பணியகத்தினால் வெளியிடப்பட்ட தரவுகள்இ இலங்கை குடிவரவு குடியகல்வு திணைக்கள புள்ளிவிபரத்தரவுகள்இ இணையத்தளங்களில் இருந்து பெற்றுக்கொண்ட தரவுகளுடன் வெளிநாட்டு பணிப்பெண்களாக சென்ற 10 பெண்களிடம் ஆழமான நேர்காணலின் மூலம் பெற்ற தகவல்களை அடிப்படையாக கொண்டும் இவ்விடய ஆய்வு மேற்கொள்ளப்பட்டது. இதனை விட தரவுப்பகுப்பாய்விற்கு கணிய ஆய்வு முறைகள் பயன்படுத்தப்பட்டுள்ளன. ஆய்வினை தெளிவாகவும்இ நேர்த்தியாகவும் விளங்கிக்கொள்வதற்காக தரவுகள் அட்டவணைப்படுத்தி கணிணிப்பொறியின் உதவியுடன் சில விளக்கங்களையும் அமைப்பதற்கு நுஒஉநட பயன்படுத்தப்பட்டுள்ளது. இவ்வாய்வின் வெளிப்பாட்டின் அடிப்படையில் பல்வேறு அழுத்த காரணிகள் பெண்கள் பொருளாதாரத்தில் பங்கேற்க காரணமாக இருப்பதுடன் பல விடயங்கள் பெண்களை நலிவுநிலைக்குட்படுத்துகின்றது. இதனால் பெண்கள் இரட்டை அழுத்தங்களுக்கு உள்ளாகின்றனர்.

**திறவுச்சொற்கள்**: நலிவு நிலைஇ தள்ளுவிசைஇ இழுவிசைஇ பொருளாதாரம்

## 1. அறிமுகம்

பெண்கள் சமூகத்தில், சமூக பொருளாதார அரசியல் ரீதியாக நலிவடைந்தவா்களாகவே காணப்படுகின்றனா். இவ்நலிவுநிலை பால்நிலையை அடிப்படையாக கொண்டு சமூகத்தால் தோற்றுவிக்கப்படுகின்றது. அது மட்டுமன்றி இனம், மதம், சாதி, குலம், அரசியல் ரீதியான வெளிப்பாடுகளும் பெண்களை நலிவடைந்த குழுக்களாக மாற்றுவதில் பெரும் பங்காற்றுகின்றன. பாதுகாப்பற்ற தன்மை, பாலியல் துன்புறுத்தல்கள், உள்நாட்டு வன்முறை, இயற்கை அனா்த்தங்கள் மற்றும் பொருளாதார அரசியல் ரீதியான பழிவாங்கல்களும் பெண்களை நலிவு நிலைக்கு உட்படுத்துகின்றன.

பொருளாதாரத்தில் பெண்களில் பங்களிப்பானது அதிக நன்மையளிப்பதாக காணப்படுகின்றது. ஆண்களுக்கு சமமான வாய்ப்புக்களை பெற்றுக்கொள்வதற்கும், ஆணாதிக்க கட்டமைப்பிலிருந்து விடுபடுவதற்கும், பெண் குடும்ப பராமரிப்புக்கு மட்டும் உரியவள் என்ற கோட்பாட்டிலிருந்து விடுபடுவதற்கும் இப்பொருளாதார பங்கேற்பு உதவுகின்றது. இதனை நோக்குகின்ற போதே இன்னுமொரு விடயத்தினையும் இங்கு கருத்திற் கொள்ள வேண்டும்.

பொருளாதாரத்தில் பங்கேற்பதால் மூன்று விடயங்கள் பெண்களை நலிவடைய செய்கின்றன. ஆணாதிக்கத்தின் காரணமாக தொடர்ச்சியான சுரண்டலுக்குட்படல், அரசியல் செயற்பாடுகளில் இருந்து பெண்களை விலக்கி வைப்பதன் காரணமாக அவர்களின் உரிமைகளை செயல்படுத்த முடியாமல்

செல்லல், ‘‘ஊதியமற்ற தொழிலாளர்கள்’’ (Care Econmy) தொடர்பாக கொள்கை வகுப்பாளர்களின் கவனமின்மை. பெண்கள் வீட்டை பராமரிப்பதன் மூலமாக மறைமுகமாக பொருளாதாரத்திற்கு உதவுகின்றனர். 2015 ஊதியமற்ற தொழிலாளர்கள் 8% காணப்படுகின்றனர் (Central Bank Report 2015). இவர்களின் பங்களிப்பை பணப்பெறுமானத்தில் கணிப்பது கடினம்.

பிள்ளைகள்இ வயோதிபர்களை பராமரித்தல் மற்றும் பாதுகாத்தல் பிள்ளைகளின் கல்வி போன்றவற்றை கவனித்து குடும்பமும் சமூகமும் செயற்பட பெண்கள் மறைமுகமான நன்மைகளை வழங்குகின்றனர். பெண்கள் வீட்டை பாரமரிப்பதன் காரணமாகவே ஆண்கள் தொழிலில் சிறப்புற்று பொருளாதாரத்திற்கு பங்களிக்க முடிகின்றது. பெண்கள் பொருளாதாரத்திலும் வீட்டிலும் தங்களது பங்களிப்பினை நல்கும் போது இரட்டை கடமைகளை நிறைவேற்ற வேண்டியவர்களாகின்றனர். இதனால் வேலைப்பளு மற்றும் ஏனைய அழுத்தங்களுக்கு உள்ளாக்கப்படுகின்றனர். பெண்கள் வெளிநாட்டு பணிக்கு எப்பொழுது செல்கின்றனரோ அப்பொழுது குடும்பம் மற்றும் பிள்ளைகள் துன்பப்படுகிறார்கள்.

வறுமைக்குழுக்களான நகர மற்றும் கிராம வறுமை சமூகம் மற்றும் தனிமைப்படுத்தப்பட்ட பெருந்தோட்டத்தை சார்ந்த பெண்களே இதில் உள்ளடக்கப்படுகின்றனர்.

ஆய்வின் நோக்கம் பொருளாதாரத்தில் பங்கேற்பதால் பெண்கள் எவ்வாறு நலிவு நிலைக்கு உள்ளாக்கப்படுகின்றார்கள். பெண்களில் வெளிநாட்டிற்கு வேலைக்கு செல்வதற்கான (பொருளாதாரத்தில் பங்கேற்பதற்கான) தள்ளுவிசை, இழுவிசை காரணிகளை கண்டறிதல், தீர்வாலோசனைகளை முன்வைத்தல் என்பனவாகும்.

## 2. ஆய்வு முறையியல்

மாத்தளைக் களுதாவளை பகுதியிலிருந்து மத்திய கிழக்கிற்கு வேலைக்கு சென்று நாடு திரும்பியவர்களிலிருந்து 10 பெண்களை அடிப்படையாக கொண்டு இவ்வாய்வு நகர்கின்றது. இவ்வாய்வுக்கான காலப்பகுதி 2 மாதமாக காணப்படுகின்றது.


இலங்கை வங்கி ஆண்டறிக்கை தரவுகள், வெளிநாட்டு வேலை வாய்ப்பு பணியகத்தினால் வெளியிடப்பட்ட தரவுகள், இலங்கை குடிவரவு குடியகல்வு திணைக்கள புள்ளிவிபரத்தரவுகள், இணையத்தளங்களில் இருந்து பெற்றுக்கொண்ட தரவுகளுடன் வெளிநாட்டு பணிப்பெண்களாக சென்ற சிலரிடம் நேர்காணல் செய்தல் மூலம் அளித்த தகவல்களை அடிப்படையாக கொண்டும் இவ்விடயஆய்வு மேற்கொள்ளப்பட்டது.

இதனை விட தரவுப்பகுப்பாய்விற்கு கணிய ஆய்வு முறைகள் பயன்படுத்தப்பட்டுள்ளன. ஆய்வினை தெளிவாகவும், நேர்த்தியாகவும் விளங்கிக்கொள்வதற்காக தரவுகள் அட்டவணைப்படுத்தி கணிணிப்பொறியின் உதவியுடன் சில விளக்கங்களையும் அமைப்பதற்கு Excel பயன்படுத்தப்பட்டுள்ளது.

### 2.1. தரவுப்பகுப்பாய்வு

இப்பெண்களின் கல்வியறிவினை நோக்கும் போது அதிக பெண்கள் ஆரம்ப கல்வியை பெற்றவர்களாகவே காணப்படுகின்றார்கள். 6 பெண்கள் 6-11ஆம் தரம் வரையான கல்வியை பெற்றுள்ளார்கள். இங்கு 3 பெண்கள் 5 மற்றும் 5 ம் தரத்தை விட குறைவாக கற்றவர்கள். ஒரு பெண்ணுக்கு எழுத வாசிக்க தெரியாது ஆனால் தன் பெயரை மட்டும் எழுத முடியும்.


ஆனால் இப்பெண்ணிண் கருத்தானது ”கல்வி அறிவு இல்லாதது என்னை பெரிதாக பாதிக்கவில்லை” காரணம் இவர் வெளிநாடு செல்வதற்கு முன் வெளிநாட்டு வேலைவாய்ப்பு பணியகத்தில் மேற்கொள்ளப்பட்ட பயிற்சியை பெற்றுள்ளார். இவர் 5 தடவை வெளிநாடு சென்று திரும்பியுள்ளார்.



மூலம்: களஆய்வு

இப்பெண்களின் கணவன்மாரின் கல்விநிலையானது இவர்களை விட குறைவாக காணப்படுகின்றது. அதிகமானவர்கள் தரம் 8 வரை கல்வி கற்றுள்ளனர் சாதாரண தரம் வரை கற்ற பெண்களின் கணவன்மார் தரம் 6-8 வரையான கல்வியையே கற்றுள்ளனர். ஏனைய 5 பெண்களின் கணவன்மார் தரம் 1-5 வரையான ஆரம்ப கல்வியை பெற்றவர்கள். ஒரு பெண்ணின் கணவன் கல்வி அறிவு அற்றவராக காணப்படுகின்றார். தரம் 8 வரை கல்விகற்ற பெண்ணொருவரின் கணவன் சாதாரண தரம் வரை கல்விகற்றவராக காணப்படுகின்றார். இவர்கள் காதல் திருமணம் செய்து கொண்டவர்கள்.

10 பெண்கள் வெளிநாட்டு வேலைவாய்ப்புக்காக சென்று வந்தவர்களை தெரிவு செய்யப்பட்டனர். இவர்கள் பொதுவாக 26-45 வயதுக்கிடைப்பட்டவர்களாக காணப்படுகின்றாகள். 30 வயதுக்கு மேற்பட்ட பெண்களே அதிகம் காணப்படுகின்றார்கள்.




மூலம்: களஆய்வு

- திருமணம்

பெரும்பாலான பெண்கள் வெளிநாட்டுக்கு செல்வதற்கு முன்பு திருமணமானவர்கள் 3 பெண்கள் முதலாவது வெளிநாட்டு பயணத்தில் போது திருமணம் செய்திருக்கவில்லை இரண்டாவது தடவை வெளிநாட்டிற்கு செல்லும் போது திருமணம் செய்த பின்னரே சென்றுள்ளனர். ஒரு பெண் தன் கணவனை பிரிந்து இருக்கின்றார். இவரின் கணவர் இப்பெண் வெளிநாடு சென்ற பின் இன்னொருவரை திருமணம் செய்துள்ளார். ஒரு பெண்ணின் கணவர் சிறைத்தண்டனை அனுபவிக்கின்றார். பொதுவாக இப்பெண்களில் கணவர்கள் இப்பெண்களின் வயதை ஒத்தவர்களாகவே காணப்படுகின்றனர் அதிக ஆண்களின் வயது 35ஆக காணப்படுகிறது.

இப்பெண்களில் கணவர்கள் எவ்வித நிறுவனத்திலும் தொழில் பயிற்சி நிலையங்களிலும் தொழில் பயிற்சி பெற்றவர்கள் அல்ல. ஆனால் இரு பெண்களின் கணவர்கள் ஆடை தைப்பவராகவும் 3 பெண்களின் கணவர்கள் கூலி தொழிலாளிகளாகவும் ஒரு பெண்ணின் கணவர் கடையில் வேலை செய்பவராகவும் காணப்படுகின்றார்கள்.

பெண்கள் வெளிநாடு செல்வதற்கு முன் இவர்களின் தொழிலாக ஒரு பெண் வீடுகளில் வேலை செய்பவராகவும், 3 பெண்கள் Batik garments இல் வேலை செய்பவர்களாகவும் காணப்பட்டனர். 2பேர் ஆடை தைப்பவர்களாகவும் கைவினைப்பொருட்கள் செய்பவர்களாகவும், இரு பெண்கள் வேலை

ஏதும் இன்றி வீட்டில் இருந்திருக்கின்றார்கள். சிலர் சிறிய கைத்தொழில் நிறுவனங்களில் வேலை செய்பவர்களாக காணப்பட்டனர். (Mixture, polythene, அலுமினிய பாத்திரங்கள்) இவர்களின் நாள் கூலி 250ரூபாயாக காணப்படுகின்றது.

4 பெண்களில் கணவர்கள் இப்பெண்கள் வெளிநாடு சென்ற பின் இவர்களுடன் வெளிநாட்டில் வேலை செய்வதற்கு இப்பெண்களின் உதவியுடனேயே சென்றுள்ளனர். இதில் ஒருவர் ஒரு வருடத்தில் அங்கு வேலை செய்ய முடியாது என திரும்பிவிட்டனர். இன்னும் மூவர் இன்றும் வேலை செய்கின்றனர். ஒருவர் நாடு திரும்பியுள்ளார். இப்பெண்களின் கணவர்கள் மீண்டும் இப்பெண்கள் அங்கு வருவதை விரும்பவில்லை.

தற்போது ஒரு பெண்ணின் கணவர் அப்பெண்ணை விட்டு இன்னொரு பெண்ணை திருமணம் செய்து கொண்டார். இன்னுமொரு பெண்ணின் கணவன் சந்தேகிப்பதன் காரணமாக விவாகரத்து செய்து விட்டார். இப்பெண்கள் தமது பொருளாதாரத்தை மேம்படுத்த சென்று தமது வாழ்க்கையை இழந்துள்ளனர்.

- வெளிநாடு சென்ற தடவைகள்

பெரும்பாலும் அதிகமாக பெண்கள் 2 தடவை வெளிநாட்டு அனுபவம் பெற்றுள்ளனர். முதல் தடவை சென்று அவரின் துணையை வெளிநாட்டுக்கு பணி செய்ய அழைத்துக்கொண்டார். இதன் காரணமாக இப்பெண் நாடு திரும்பி மீண்டும் செல்லவில்லை. இன்னுமொரு பெண் தன்னுடைய ஒப்பந்த காலத்தை முடித்து வரும் போது அதிக சுகவீனமடைந்து விட்டதன் காரணமாக மீண்டும் செல்லவில்லை. அதிக பெண்கள் 3 தடவைக்கு மேல் சென்றுள்ளனர். மூன்று பெண்கள் 4 தடவையும் இரண்டு பெண்கள் 2 தடவையும் ஒரு பெண் 6 தடவையும் மற்றுமொரு பெண் 5 தடவையும் சென்றுள்ளனர்.

- வெளிநாட்டிற்கு சென்று வந்த பெண்களின் குழந்தைகள் நிலை

சராசரியாக ஒவ்வொருவருக்கும் 3 பிள்ளைகள் காணப்படுகின்றனர். ஒரு பெண்ணுக்கு 6 குழந்தைகளும் காணப்படுகின்றனர்.

ஒரு பெண் வெளிநாட்டிற்கு சென்று திரும்பிய பின் குழந்தை பெற்றார். அதனால் அவர் மீண்டும் வெளிநாட்டிற்கு செல்லவில்லை. இவரின் கருத்தானது "நாங்கள் திருமணம் செய்ததன் பின் வேண்டுமென்றே குழந்தை பெற்றுக்கொள்ளவில்லை காரணம் நாங்கள் குழந்தை பெற்றுக்கொள்ள முன் வெளிநாட்டிற்கு சென்று குறிப்பிட்டளவு உழைக்கவேண்டும் என்று விரும்பினோம்." குடும்ப வாழ்க்கை தொடரமுன் உழைத்து வந்துள்ளார். தற்போது 2 குழந்தைகள் இருக்கின்றனர். இதில் கணவர் தற்போது வெளிநாட்டில் பணிபுரிகின்றார்.

இப்பெண்களின் குழந்தைகளில் பெரும்பாலானோர் பாடசாலை கல்வியை இடைநிறுத்தியவர்களாக காணப்படுகின்றனர். 3 பெண்களின் குழந்தைகள் க.பொ.த சாதாரண தரப்பரீட்சையில் தோற்றி சித்தியடையவில்லை. ஒரு பெண்ணின் மூத்த மற்றும் இளைய மகன்கள் தற்போது வெளிநாட்டில் பணி புரிகின்றனர். இளைய மகள் தற்போது பல்கலைக்கழகத்தில் கல்வியை தொடருகின்றார். இரு மகன்மாரும் இவர் வெளிநாட்டில் பணிபுரியும் போது சாதாரணதர கல்வியை இடைநிறுத்தினர்.

ஒரு பெண்ணின் பிள்ளை தரம் 8 இல் கல்வி கற்கிறார். 2 பெண்களின் பிள்ளைகள் கடைகளிலும் மேலும் 2பேர் விற்பனை பிரதிநிதிகள் ஆகவும் இருக்கின்றனர். 3 பெண்களின் 3 குழந்தைகள் காதல் திருமணம் சிறு வயதிலே செய்து கொண்டனர். தாய் வெளிநாட்டில் இருக்கும்போது 19, 20 வயதுகளில் திருமணம் செய்து கொண்டனர்.

ஒரு பெண்ணுக்கு 4 குழந்தைகள். 2 மகள்கள் திருமணம் செய்து விட்டார். 1 மகன் முச்சக்கர வண்டி ஓட்டுனர். இளைய மகள் ஆடை தைக்கின்றார். மற்றும் ஒரு பெண்ணின் மகள் உயர்தரப்பரீட்சைக்கு தோற்றி சித்தியடையவில்லை 3 தடவை சித்தி பெறாது கலைப்பிரிவில் பட்டப்படிப்பை வெளிவாரியாக தொடர்கின்றாள்.

3 பெண்களில் 3 ஆண்பிள்ளைகள் வாகன ஓட்டுனராகவும் 3 பெண்பிள்ளைகள் கல்வியை இடைநிறுத்திவிட்டு வெளிநாட்டிற்கு வேலைக்கு சென்றுவிட்டனர். இரு ஆண்பிள்ளைகள் சுயமாக வியாபாரம் செய்கின்றனர்.

இதில் ஒரு பெண் தான் வேலை செய்த இடத்திற்கு மகனை வேலைக்கு சேர்த்துள்ளார் அதன்பின் இவர் வெளிநாடு செல்லவில்லை.

- வெளிநாடு செல்லவதற்கு முன் இருந்த சமூக மற்றும் பொருளாதார நிலை

வறுமையை தோற்கடிப்பதே வெளிநாட்டிற்கு செல்வதற்கான முக்கிய காரணமாக உள்ளது. இப்பெண்கள் வெளிநாடு செல்வதற்கு முக்கிய காரணிகள் உணவு, உடை, உறையுள் போன்றவற்றை பெற்றுக்கொள்வதற்காக அல்ல. அதை விட முக்கிய காரணிகளாக குறைவான வேலைவாய்ப்பு, வேலை இன்மை, குறைவான வருமானம், பொருளாதார ரீதியான நெருக்கடித்தன்மை போன்றவையே வெளிநாடு செல்வதற்கு காரணமாகின்றன. வெளிநாட்டு வேலையானது பிள்ளைகள், கணவனின் தேவையை நிறைவேற்றுவதற்கு போதியளவு பணத்தை பெற்றுக்கொள்ள வாய்ப்பாகின்றது. ஒரு பெண் இவ்வாறு கூறுகின்றார் ''வெளிநாட்டிற்கு வேலைக்கு செல்வதற்கு முன் எங்கள் வீட்டில் அரிசி வாங்குவதற்கு கூட வசதியிருக்கவில்லை''. மேலும் ஒரு பெண் பின்வருமாறு விபரிக்கின்றார். ''எனது கணவன் நிலத்தை அடமானம் வைத்து அப்பணத்தை குடித்து அழித்தார்''.

அதிக பெண்கள் வெளிநாடு செல்வதற்கு முன், கணவன் உழைக்கும் பணம் பிள்ளைகளின் உணவுக்கே போதவில்லை எனவும் அதிக பெண்கள் தம் வீட்டு நிலம் அடமானம் வைக்கப்பட்டுள்ளது எனவும் அதனை மீட்டெடுக்க பணம் தேவை எனவும் ஒரு பெண் தன் கணவர் எவ்வித பொறுப்பும் அற்றவர் எனவும் கூறுகின்றனர். இவையே இப்பெண்கள் வெளிநாடு செல்ல தூண்டிய காரணிகளாகும்.

அதிக பெண்கள் அவர்கள் சிறு வயதில் அனுபவித்த வறுமையை விபரித்தனர். அவர்கள் அவ்வாழ்க்கையை மாற்ற வேண்டும் என்றும் தம் பிள்ளைகள் அத்துன்பத்தை அனுபவிக்க கூடாது எனவும் விரும்புகின்றனர்.

மேலும் இவர்களின் பிள்ளைகளின் சகோதரர்களின் கல்வித்தேவைக்காகவும் திருமண தேவைக்காகவும் சிலர் தமது திருமணத்திற்கு பொருள் ஈட்டுவதற்க்காகவும் வெளிநாடு சென்றுள்ளனர்.

- வெளிநாடு செல்வதற்கு முன் பிள்ளைகளின் கடமைகள் பொறுப்புக்கள் தொடர்பான ஏற்பாடுகள்

முதல் தடவை வெளிநாடு செல்லும் பெண்கள் பிள்ளைகளை கணவனிடம், கணவனின் தாய் அல்லது தனது தாயிடம் விட்டு சென்றனர். இரண்டாவது தடவை செல்லும் போது கணவனிடம் இருந்த பிள்ளைகளை தன்னுடைய தாயிடம் அல்லது பிள்ளைகளிடம் விட்டு சென்றனர். காரணம் பிள்ளைகள் தந்தையால் குடிபோதையில் அடித்தல், தீய வார்த்தைகளை பிரயோகித்தல் பேன்ற துஸ்பிரயோகத்திற்கு உள்ளாக்கப்பட்டிருந்தனர்.

ஒரு பெண் பிள்ளையை கணவனிடம் விட்டு சென்றார். பின் சிறிது காலத்தில் தன்னுடைய கணவரையும் வெளிநாட்டு வேலைக்கு சென்றதால் பிள்ளையை தன்னுடைய தந்தையிடம் விட்டு செல்ல வேண்டிய தேவை ஏற்பட்டது. தந்தை வயோதிபராகையால் இப்பிள்ளையை பராமரிப்பது கடினம் என சிறிது காலத்தின் பின் அப்பிள்ளை விடுதியில் சேர்க்கப்பட்டார். அப்பிள்ளை பெற்றோரின் அரவணைப்பின்றியே வளர்ந்துள்ளது.

மற்றொரு பெண் தனது பெண்பிள்ளைகளை அவரின் தாயிடம் விட்டு சென்றார். இவர் முதல் தடவை வெளிநாடு சென்று திரும்பிய போது மூத்த பெண்பிள்ளை தான் காதலித்த ஆண்மகனை தனது விருப்பத்தில் திருமணம் செய்து கொண்டார். இரண்டாவது தடவை சென்று திரும்பிய போது இளைய மகள் தான் காதலித்த ஆண்மகனை திருமணம் செய்து கொண்டார். இப்பெண் கூறுகையில் ''நானும் என் கணவரும் என் இரு பிள்ளைகளுக்காகவே கடுமையாக உழைத்தோம் ஆனால் அவர்கள் எங்களை தூக்கியெறிந்து விட்டார்கள். நான் இங்கு இருந்திருந்தால் இவ்வாறு இடம்பெற்றிருக்காது''.

பெரும்பாலான பெண்கள் தமது இலக்கை அடையவில்லை என்றே கூற வேண்டும். குழந்தைகளின் கல்விக்காக சென்றவர்களின் பெரும்பாலான பிள்ளைகள் கல்வியை இடை நிறுத்தி விட்டார்கள். மேலும் ஆண் பிள்ளைகள் போதைப்பழக்கத்திற்கு உள்ளாகியுள்ளனர்.

## 3. விளைவுகளும், தீர்வாலோசனைகளும்.

- **தள்ளுவிசை, இழுவிசை காரணிகள்**

பொதுவாக வெளிநாட்டுப் பணிப்பெண்களாக செல்பவர்கள் அனேகமாக குறைந்தளவு கல்வி அறிவினை உடையவர்களாகவும், மேலும் 25-44 வயதுடையவர்களே அதிகமாக செல்கின்றனர்.

சமூகத்தினால் ஓரங்கட்டப்பட்ட பெண்களே அதிகமாக வெளிநாட்டிற்கு பணிக்கு செல்கின்றனர். இவ் ஒதுக்கப்பட்ட சமூகத்தினை சார்ந்தவர்கள் அதிக நலிவு நிலைக்கு தள்ளப்படுவதனாலும், நாடு அவர்களுக்கு போதுமான வருமானத்தினை பெறும் வேலைவாய்ப்புக்களை அல்லது சுய தொழில் முயற்சிக்கான வாய்ப்புக்களை வழங்க மறுக்கின்ற போதும் குடும்ப பொருளாதார மேம்பாட்டிற்காக வெளிநாடு செல்கின்றனர்.

உள்நாட்டில் பெறும் வருமானம் ஒழுங்கற்றதாக காணப்படுகின்றது. வாழ்க்கை தரத்தினை உயர்த்திக்கொள்ள போதுமான ஒழுங்கான வருமானம் இன்மை. சகிக்க முடியாத சந்தர்ப்பங்களில் (zero tolerance) வெளிநாட்டிற்கு பணிப்பெண்களாக செல்கின்றனர்.

பெண்களுக்கு சமூகத்தில் பல பாத்திரங்களை வகிக்க வேண்டியுள்ளது. தாயாக, மகளாக, மனைவியாக, சகோதரியாக, குடும்ப தலைவியாக என பல்வேறு பொறுப்புக்கள் காணப்படுகின்றன. வரதட்சணை வழங்குவதற்காக மணமாகாதபெண் தனக்காகவும், தாய் மகளுக்காகவும் தங்கைகளுக்காகவும் பொருள் தேடுகின்றாள்.

வதிவிடத்தை அமைக்க அதிக பணம் தேவைப்படுகின்றது. கல்வியற்ற சமூகத்தை சேர்ந்தவர்களுக்கு வீடு ஒன்றினை விரைவாக அமைக்கும் அளவிற்கான பணத்தை பெற்றுக்கொள்ளும் வேலை இலங்கையில் கிடைப்பது கடினம்.

சகோதரர்கள் மற்றும் குழந்தைகளுக்கு கல்வியினை வழங்குவதற்கு பணம் தேவை.

ஏற்கனவே பெற்ற கடனை மீள செலுத்துவதற்கான பணத்தை உழைக்க வெளிநாடு செல்கின்றனர். வெளிநாடு சென்ற கடனை செலுத்துவதற்கு மீண்டும் செல்கின்றனர்.

போதை மற்றும் வன்முறை - கணவன்மார் குடிப்பழக்கத்திற்கு அடிமையாகிவிடுவதன் காரணமாக மனைவிமார் குடும்ப நலனுக்காகவும் வன்முறையை தடுக்கவும் வேலைக்கு செல்லுதல்.

பெண் தலைமைத்துவம் கொண்ட குடும்பங்கள் - கணவனை இழந்த அல்லது விவாகரத்து பெற்ற பெண்கள் குடும்பங்களில் பொருளாதார நிலைமைக்காக புலம்பெயர் பணிக்கு செல்கின்றார்கள்.

மத்திய கிழக்கு நாடுகளில் திறமையற்ற அல்லது அறை குறை திறமையுடையவர்களுக்கு தேவை அதிகமாக இருப்பதால் இவை உள்ளூர் நிலைமைகளை நிறைவேற்ற மாற்றுவழியாக உள்ளது.

- **பொருளாதாரத்தில் பங்கேற்பதால் பெண்கள் எவ்வாறு நலிவு நிலைக்கு உள்ளாக்கப்படுகின்றார்கள்**

அதிக வெளிநாட்டு பணிப்பெண்கள் நாடு திரும்பும் போது மனநிலை பாதிப்பு, ஆஸ்துமா, இதயம் சம்பந்தப்பட்ட நோய்கள், போலியோ நோய்களை கொண்டவர்களாக காணப்படுகின்றனர். இவை சில நேரங்களில் வேலையின் தன்மை மற்றும் உள உடல் ரீதியாக துன்புறுத்தல்கள் தனிமைப்படுத்தல் மற்றும் குறைவான ஊட்டச்சத்து போன்றவற்றால் ஏற்படலாம். ஆய்வுப் பிரதேசத்திலிருந்து வெளிநாடு சென்ற பெண்கள் மன அழுத்தத்திற்கு உட்பட்டவர்களாகவும் ஆஸ்மா போன்ற நோய்களுக்கு ஆட்பட்டவர்களாகவும் காணப்படுகின்றனர்.

சில பெண்கள் தம் ஒப்பந்த காலத்தினை நிறைவு செய்து நாடு திரும்பும் போது அவர்களின் ஊதியத்தை அதிகம் இழக்கின்றனர். அதிகமாக உழைத்து குடும்பத்திற்கு அனுப்பப்படுகின்ற பணம் வீண்விரயம் செய்யப்பட்டு குறைவான சேமிப்பின் காரணமாக இப்பெண்கள் மீண்டும், மீண்டும் வெளிநாடு செல்ல வேண்டி ஏற்படுகிறது.

குடும்ப உறவுகளில் முறிவு. மனைவி வெளிநாடு சென்றதும் கணவர் இன்னொரு பெண்ணை திருமணம் செய்திருத்தல், பெண்கள் நாடு திரும்பும் போது கணவர் சந்தேகப்படுதல்.

பிள்ளைகளின் கல்வி மற்றும் பாதுகாப்பு அரவணைப்பு பாதிக்கப்படல். இவர்களின் எதிர்ப்பார்ப்புக்கள் நசுக்கப்படுகின்றன.

சில பெண்கள் வேலை செய்யும் இடங்களில் துஸ்பிரயோகத்திற்கு உட்படுத்தப்படுதல். அதிக வேலைப்பழு மனஅழுத்தம் போன்றவை ஏற்பட்டுள்ளன.

பெண்கள் தலைமை தாங்கும் வீடுகளில் நலிவு நிலையின் தன்மை அதிகமாகவே இருக்கும். எல்லாப்பொறுப்புக்களும் இவர்களை சார்வதால் பெண்கள் விரைவாக அழுத்தத்திற்கு உள்ளாகின்றனர்.

வீட்டில் உறவினரிடம் விட்டு செல்லப்படும் குழந்தைகள் பாலியல் துஸ்பிரயோகத்திற்கு உட்படுத்தப்பட்டிருத்தல் அல்லது அரவணைப்பின்றி இருத்தல் தப்பான வழியில் செல்லல்.

**பரிந்துரைகள்**

வறுமை குறைப்பு நடவடிக்கைகளில் அதிக முன்னேற்றங்களை கொண்டு வருதல் வேண்டும். ஒதுக்கப்பட்ட குழுக்களின் தேவைகளை அடையாளம் கண்டு நிலைத்து நிற்கக் கூடிய வருமானத்தை பெற்றக்கொடுக்கும் வகையிலான தொழில் வாய்ப்புக்களை கிராமங்களில் அரசு ஏற்படுத்த வேண்டும்

கிராமிய மட்டத்தில் பெண்களிடம் தொழில்சார் திறன்களை வளர்ப்பதில் சிறப்பு கவனம் செலுத்துவதன் மூலம் தொழில் வாய்ப்புக்களை அதிகரித்தல். வறுமை குழுக்களுக்கு புதிய சந்தை வாய்ப்புக்களை இனங்காண்பதற்கான கடன் வசதிகளை செய்து கொடுத்தல். கிராமிய ரீதியில் பெண்கள் அனைவரும் ஒன்று கூடி பெண்கள் அமைப்புக்களை நிறுவி சிறு கைத்தொழில் நிறுவனங்கள், உணவு அமைப்புக்களை அமைக்க அரசு உதவல்.

இலங்கையில் அல்லது வெளிநாட்டிற்கு வேலைக்கு செல்லவிருக்கும் பெண்களின் திறன்களை விருத்தி செய்ய அரச தனியார் தொழில்பயிற்சி நிலையங்களில் பயிற்சிகளை நடாத்துதல்.

சிறிய மற்றும் நடுத்தர தொழில் முயற்சிகளினை உற்சாகப்படுத்துதல் வேலைவாய்ப்பு இடைவெளிகளை நிரப்புவதற்கு அரசு கிராமிய ரீதியில் நடவடிக்கை எடுத்தல்.

நாடளாவிய ரீதியில் கிராம சேவக பிரிவுகளில் வீட்டு வன்முறைகளை தடுப்பதற்கான அல்லது பாதுகாப்பதற்கான நிகழ்ச்சிகளை நடாத்துதல். வரதட்சணைக்கு எதிராக போரிடும் வலிமையை நிகழ்ச்சிகளின் மூலமாக கொடுத்தல்.

- **சட்ட நடவடிக்கைகள்**

பொதுவாக நம் நாட்டிலருந்து வெளிநாடு சென்ற பெண்களுக்கு மனித மற்றும் பெண்களுக்கு உரிமை மீறுதல், கடத்தல் தொடர்பானவற்றிற்கு சட்டரீதியான நடவடிக்கை எடுத்தல்.

வெளிநாட்டு வேலைவாய்ப்புக்கு செல்லும் பெண்கள் தொடர்பான சட்டங்களை கடுமையாக்குதல்.

(Safe house) வீடு பாதுகாப்பானதாயென, தூதரகங்களிலும் மக்கள் தொண்டு நிறுவனங்களினாலும் கண்காணிக்கப்பட வேண்டும்.

வெளிநாட்டிற்கு பெண்களை பணிக்கு அனுப்பும் அரசாங்கம், பணிக்கு பெற்றுக்கொள்ளும் நிறுவனத்துடன் மனித உரிமை சட்டத்தின் கீழுள்ள ஒழுக்கங்களையும், பணியாட்களின் உரிமைகளையும் ஏற்றுக்கொள்ள அழுத்தம் கொடுக்கவேண்டும்.

தூதரகங்கள் வெளிநாட்டு பணிப்பெண்களுக்கான உளவியல் ஆலோசனைகளை பெற்றுக்கொடுத்தல்.

அவர்களுக்கு ஊதியம் கிடைக்காவிடின் சட்டரீதியான நடவடிக்கை எடுத்தல்.

- **வெளிநாட்டு வேலைவாய்ப்பு பணியகத்தின் நடவடிக்கைகளை அதிகரித்தல்**

வெளிநாட்டு வேலைவாய்ப்பு பணியகத்திற்கும், மக்களுக்கும் செயலகத்திற்கும் இடையே இடைத்தொடர்புகளை ஏற்படுத்த வேண்டும். வெளிநாட்டு பணிப்பெண்கள் தொடர்பான தகவல்களை அவர்களுடைய குடும்பங்களுக்கு வழங்க இது உதவியாக இருக்கும்.

வெளிநாட்டு வேலைவாய்ப்பு பணியகத்தின் கிளைகளை மாவட்டங்களில் அமைப்பதன் மூலம் கட்டாயப்படுத்தல் மற்றும் சுரண்டல்களை தவிர்க்கமுடியும்.

வெளிநாட்டு வேலைவாய்ப்பு பணியகத்தின் சேவைகளை வெளிநாட்டிலும் வழங்குதல், அங்கு பயிற்சிகளையும் சலுகைகளையும் கண்காணித்தல்.

வெளிநாட்டு வேலைக்கு செல்லும் பெண்களுக்கும், அவர்களது குடும்ப அங்கத்தவர்களுக்கும் வெளிநாட்டு வேலைவாய்ப்பு பணியகத்தினது பணியாளர்கள் மூலமாகவும் சமூக வலைத்தளங்கள் ஊடாகவும் கிராம சேவகர், மாவட்ட செயலாளர் மூலமாகவும் முக்கிய தகவல்களை விளக்குதல்.

ஒப்பந்தம் மற்றும் காப்புறுதி படிவங்களை பணிப்பெண்கள் கையொப்பம் இடுவதற்கு, அப்படிவங்கள் அவர்களின் தாய்மொழியில் இருத்தல் வேண்டும். இப்படிவங்கள் பணியாளர்களுக்கும், அவர்களின் குடும்ப அங்கத்தவர்களுக்கும் கொடுக்கப்பட்டு சரியான தகவல்கள் நிரப்பப்பட வேண்டும். (பெயர், முகவரி, தொடர்பு கொள்ள வேண்டிய எண், குடும்ப அங்கத்தவரின் வேலையின் தன்மை)

போலியான வேலைவாய்ப்பு நிறுவனங்களை அடையாளம் கண்டு அவற்றை ஊடகங்களில் அடையாளப்படுத்துவது மட்டுமன்றி அவற்றை கிராமசேவகர் அலுவலகம், மாவட்ட செயலகம் போன்றவற்றில் காட்சிப்படுத்த வேண்டும்

கிராம சேவக மட்டத்தில் வெளிநாட்டு பணிப்பெண்களுக்கு சட்டங்களையும், உரிமைகளையும் பற்றி விளக்கமளித்தல். மேலும் துணை நிறுவனம் (Sub Agency) பற்றிய விளக்கமளித்தலும் அவற்றுக்கு அனுமதிபத்திரம் வழங்கல்.

**5. உசாத்துணைகள்**


Amnesty International. (2007). Indonesia: Explosion and Abuse: The Plight of Women Domestic Workers. Amnesty International.

Annual Central Bank Report (2015). Central Bank of Sri Lanka.

Gamburd, M, (2009). Advocating for Sri Lankan Migrant Workers. Critical Asian Studies, (61-88).

Migration of Sri Lanka Women Analysis. Analysis of Causes & Post – Arrival Assistance.

Silvery, R. (2004).Transnational migration and the gender politics of scale: Indonesian Domestic Workers in Saudi Arabia. Singapore Journal of Tropical Geography, (141-155).